## பாதஹேவாஹட்ட பிரதேச சபை
## கண்டி மாவட்டம்

-----------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மே 05 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து பாதஹேவாஹட்ட பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பெல்வூட் கலை கேந்திரத்திற்குச் செல்லும் வீதியை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த ரூபா 76,415 தொகை திருத்திய நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோரின் கீழ் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,828,280 ஆக இருந்ததுடன், மற்றும் பயன்பாட்டு பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,214,886 ஆக இருந்தமையால் ரூபா 6,613,394 தொகையான வேறுபாடு கண்டறியப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 82,778,319 தொகையானதுடன் அதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,188,479 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 32,365,767 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளில் ரூபா 22,325,137 நிர்மாண கடன்கொடுத்தோர் மீதியாக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 6,639,416 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

5 கணக்கு விடயங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால், ரூபா 12,863,223 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவு | வீதி பெயர்ப் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | |
| i 99 ஆம் விதி | மீளாய்வாண்டின் சனவரி, பெப்ரவரி மற்றும் திசெம்பர் மாதங்களில் உரிய ரூபா 1,121,459 பெறுமதியான 57 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| ii 207 மற்றும் 208 ஆம் விதி | முறையான கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் ரூபா 532,757 பெறுமதியான நீர் உபகரணங்கள், மின் உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் 7 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| iiii 218 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடொன்றை மேற்கொள்ளப்பட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) சுற்றறிக்கைகள். | |
| i 2006 மே 30 ஆந் திககதிய ஆ/7/5/4/11 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கை | அலுவலக உதவியாளர் மற்றும் தொழிலாளர் பதவிகள் வகிக்கும் ஊழியர்களின் கடமை நேரம் மு.ப 8.00 மணி முதல் 16.45 ஆக இருந்த போதிலும் அவர்களை உரித்தல்லாத ஏனைய நேரங்களில் கடமைகளில் ஈடுபடுத்தி கடமை நேரம் மு.ப 8.30 முதல் 16.15 ஆக 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி பொதுச் சபையால் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. |
| ii 1992 பெப்ரவரி 26 ஆந் திகதிய 05/01/119 தொகுதி ix ஆம் இலக்க நகர | திட்டமிடல் குழு கடமை நேரத்தினுள் நடாத்தப்பட்டு மீளாய்வாண்டினுள் ரூபா 228,000 தொகை குழுப் படிகளாக செலுத்தப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| | அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | |
| iii | 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்றி ஆணையாளரின் சுற்றறிக்கை | 1994, 1995 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த பொது வியாபாரச் சந்தையில் உள்ள கடைகளுக்கு உரித்தான 12 குத்தகையாளர்களின் குத்தகை உடன்படிக்கைகளை திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 33,941,501 ஆகக் இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,481,289 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 17,460,212 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

வீத வரி, குத்தகை, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 58,667,352 ஆன மீதியொன்று நிலுவையாக இருந்தது.

#### 2.2.2 வீதவரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 4,975,244 ஆக இருந்ததுடன், அதில் ஆண்டினுள் ரூபா 408,963 அறவிடப்பட்டிருந்தன. ஆண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 2,657,975 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 1,565,819 அறவிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது நிலுவையிலிருந்து பட்டியலிடல்களிலிருந்தும் அறவீடுகள் முறையே 8 சதவீதமாகவும் 58 சதவீதமாகவும் இருந்ததுடன், திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 5,658,437 ஆக இருந்தது.

(ஆ) 2008 ஆம் ஆண்டின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது.

(இ) 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 9 அரச நிறுவனங்களிடமிருந்து நிலுவையாக இருந்த ரூபா 997,598 ஆன வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கடை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தலாத்துஓய 3 ஆம் இலக்க கடையிலிருந்து 8 ஆண்டுகளுக்கு முன்னிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 231,410 ஆன வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இறைச்சிக் கடை வாடகை நிலுவை மீதி ரூபா 706,067 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டிருந்த வருமான பகுப்பாய்வு அறிக்கையில் இறைச்சிக்கடை வாடகை நிலுவை மீதி ரூபா 744,812 ஆக இருந்தது. எவ்வாறாயினும் உரிய கடை பதிவேட்டைப் பரீட்சித்த போது மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 842,632 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது.

**2.2.4 ஏனைய வருமானம்**

**(அ) நீர்க் கட்டணம்**

சபைக்குச் சொந்தமான 5 நீர்ச் செயற்திட்டங்களில் நீர்மானிகள் பொருத்தப்படாமல் நிலையான கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 14,341,165 ஆன நீர் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**(ஆ) ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி நிலுவை ஏக்கர் வரி ரூபா 1,023,444 ஆக இருந்ததுடன் இம்மீதி 2013 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டு வருகின்றது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,424,904 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா 33,852,820 ஆன முத்திரைக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டியிருந்தன. 2009 முதல் 2013 வரையான காலப்பகுதிக்குரித்தாக அறவிடப்பட வேண்டிய ரூபா 3,743,497 ஆன முத்திரைக் கட்டணங்களும் அதில் உள்ளடங்கியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

(அ) சபை நிதியத்தின் கீழ் மீளாய்வாண்டில் ரூபா 5,735,000 தொகையான 26 செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட 18 நிர்மாண வேலைகள் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும்,

அதில் 4 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உரிய கவனத்தை செலுத்தாமலும் தேவைப்பாட்டை குறிப்பாக இனங்காணாமலும் செயற்திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்ட காரணத்தினால் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,900,000 பெறுமதியான பிரதேச சபைகளை வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய 3 செயற்திட்டங்களை மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் உழைத்த ரூபா 51,902,400 மீண்டெழும் வருமானத்திலிருந்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 12,406,467 தொகையான 23.9 சதவீதமாக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் பொது சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 2 செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 575,000 தொகை நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினருக்கு இடையே 29 பதவிகளில் வெற்றிடங்களும் 14 மிகையும் காணப்படுகின்றன.

(ஆ) அலுவலக உதவியாளர்கள், வெளிக்கள உதவியாளர்கள், காவலாளிகள் மற்றும் நூலக உதவியாளர் பதவிகளை வகிக்கும் 13 நபர்கள் அலுவலக வருமானத்தை அறவிடல், நிர்வாக நடவடிக்கைகள், வாகனக் கட்டுப்பாடு போன்ற பொறுப்பான சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை கொடுப்பனவு செய்வதன் பேரில் ரூபா 31,255 மிகை கட்டணங்களாக செலுத்த நேர்ந்தது.

(ஈ) சபையின் கெப் வண்டியொன்று 2015 மே 14 ஆந் திகதி விபத்திற்குட்ப்டிருந்த போதிலும் 2016 நவம்பர் 9 ஆந் திகதி வரையிலும் நி.பி 104(4) இன் பிரகாரம் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாமல் பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 2014 முதல் 2016 வரையான காலப்பகுதியில் 823 கட்டிட விண்ணப்பங்களில் 586 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ்கள் 56 விண்ணப்பங்களிற்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) முறையற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டில் முச்சக்கர வண்டிக் கட்டணங்களை பட்டியலிடல் மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் கட்டணங்களை செலுத்தாமை போன்ற காரணங்கள் பேரில் 128 முச்சக்கர வண்டிகளிலிருந்து மீளாய்வாண்டிற்காக அறவிட்பபட

வேண்டிய ரூபா 460,800 தொகையை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு 2017 ஏப்ரல் 18 ஆந் திகதி அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பொதுக் களஞ்சிய பரிசோதனையின் போது ரூபா 71,070 பெறுமதியான 6 மின் உபகரண உருப்படிகளில் மிகையொன்றும் ரூபா 25,580 பெறுமதியான 6 உருப்படிகளில் பற்றாக்குறை காணப்பட்டது.

**3.4 விளைவற்ற குறைப்பயனபாட்டிலான சொத்துக்கள்**

ரூபா 1,019,000 பெறுமதியான உழவு இயந்திரமொன்றும் டேலரும் 2013 ஆம் ஆண்டு முதல் செயலற்று அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் 15 தொன் கழிவுப்பொருட்கள் வாராந்தம் சேகரிக்கப்படுவதுடன், உக்கும் கழிவுகளை கொம்போஸ்ட் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், கழிவுப்பொருட்களை சலித்தல் தொழிலாளர்களை ஈடுபடத்தி கையால் இயக்கும் இயந்திரமொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சேதனப் பசளை விற்பனை மற்றும் பகிர்ந்தளிப்பதற்காக போதியளவு வேலைத்திட்டமொன்றை பின்பற்றாமை, கழிவுப் பிரிவில் பாரியளவில் பொதி செய்யப்படாத சேதனப் பசளை இருப்பு குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன், உக்காத கழிவுகளை அகற்றுவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளபடியான வருமானம் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையே 2 வருமான விடயங்கள் மற்றும் 7 செலவின விடயங்களில் 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 40 வருமான விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,469,500 ஆன நிதி ஏற்பாடுகள் அச்செயற்பாடுகளக்கு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன.

**4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்**

மீளாய்வாண்டில் ரூபா 56,554,902 ஆன மூலதனச் செலவினத்தை சபை செலவிட்டிருந்த போதிலும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டினை மேவுகை செய்யும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு விடயங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு வேறு கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்த காரணத்தால் போதுமானதும் சுதந்திரமானதுமான உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) நிதிக் கட்டுப்பாடு
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு